செ.வெ.எண்-26 நாள்-16.09.2020

**அரியலூர் மாவட்டத்தில் ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத குழந்தைகளை உருவாக்கும் நோக்கில் ஊட்டசத்து விழிப்புணர்வு மாதம் கொண்டாடப்பட்டு வருகிறது - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் தெரிவித்தார்கள்.**

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்துறையின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 1 முதல் 30 வரை ஊட்டச்சத்து மாதமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் அரியலூர் மாவட்டம், எருத்துக்காரன்பட்டி ஊராட்சி, அமீனாபாத் அங்கன்வாடி மைய வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் காய்கறி விதைகளை விதைத்து, காய்கறிகளின் விதைகளை அங்கன்வாடி ஊழியர்களுக்கு வழங்கினார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

அரியலூர் மாவட்டத்தில் ஊட்டச்சத்து மாதமாக செப்டம்பர் 1 முதல் 30 வரை கொண்டாடப்பட்டு வருகிறது. மாவட்டத்திலுள்ள 6 வட்டாரங்களில் ஊட்டச்சத்து உணவுகள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. இந்நிகழ்ச்சி மூலம் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடு ஏற்படா வண்ணம் குழந்தையின் முதல் 1000 நாட்களின் முக்கியத்துவத்தை உணர்த்துதல், இரத்த சோவை இல்லாமல் செய்தல், வயிற்றுப்போக்கு தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல், சுத்தமாக கைக்கழுவும் பழக்கம் மற்றும் சுகாதாரம் பேணுதல், ஊட்டச்சத்து உள்ள உணவுகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல் என மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி ஊட்டச்சத்து குறைபாடு இல்லா மாவட்டமாக உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிகழ்ச்சி மூலம் கிராம பகுதிகளிலுள்ள பொதுமக்களிடம் ஊட்டச்சத்து உணவுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், தோட்டக்கலைத்துறை உதவியுடன் அனைத்து அங்கன்வாடி மையங்களிலும் ஊட்டச்சத்து மிக்க காய்கறிகளான கத்தரி, தக்காளி, வெண்டை, கொத்தவரை, தட்டைப்பயிறு, சுரைக்காய் மற்றும் அவரை ஆகிய விதைகள் மற்றும் இயற்கை உரங்கள் ஆகியவைகள் வழங்கப்பட்டு காய்கறி தோட்டங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் அங்கன்வாடி மையங்களில் பயிலும் குழந்தைகள் ஊட்டசத்து மிக்க காய்கறிகள் உண்பது உறுதிப்படுத்தப்படும். எனவே, பொதுமக்கள் அனைவரும் ஊட்டச்சத்து உணவுகளை உட்க்கொண்டு உடல்நலத்தினை நன்கு பேணிக்காக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிசாமி, திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டம்) எம்.சாவித்திரி, எருத்துக்காரன்பட்டி ஊராட்சி மன்றத்தலைவர் பரமசிவம் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**